தமிழக முதலமைச்சரை தலைமைச் செயலகத்தில், ஆஸ்திரேலிய நாட்டு தூதர் பிட்டர் வர்கீஸ் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். உடன் ஆஸ்திரேலிய நாட்டு துணைத் தூதரும், தென்னிந்தியாவிற்கான வர்த்தக ஆணையர் அமீனூர் ரஹ்மான், தலைமைச் செயலாளர் கே.எஸ்.ஸ்ரீபதி.

கிராம சாலைகளை செப்பனிடக் கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

விருதுநகர்: கிராம சாலைகளை செப்பனிடக் கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சாத்தூர் அருகிலுள்ள உப்பத்தூர் அய்யம்பட்டியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் கூட்டம் கிளை செயலாளர் காளியப்பன் தலைமையில், வெள்ளத்துரை முன்னிலையில் நடைபெற்றது. நாற்கர தேசிய நெடுஞ் சாலையிலிருந்து உப்பத்தூர், அருணாசலபுரம், அய்யம்பட்டி, வன்னிமடை உள்ளிட்ட கிராம சாலைகள் போடப்பட்டு 15 ஆண்டுகளாகியும் செப்பனிடாமல் குண்டும் குழியுமாக உள்ளது.

உடனடியாக சாலைகள் செப்பனிடப்படாவிட்டால் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தப்படும் என பொதுக் கூட்டத்தில் பேசிய தலைவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனிக்குமார், சாத்தூர் நகர செயலாளர் முத்து, ஏஐடியுசி வட்டச் செயலாளர் சுவாமிநாதன், விவசாய சங்க வட்ட செயலாளர் சண்முகையா ஆகியோர் பேசினார்கள்.

கல்லூரி ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

ஏஐஒய்எப் பங்கேற்பு

தஞ்சை: அரசுக்கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளைப் பல்கலைக் கழகங்களாக மாற்றும் முடிவினைக் கைவிட வலியுறுத்தியும், இதற்கென்று அமைக்கப்பட்ட கல்வியாளர் குழுவினை உடன் கலைத்திட கோரியும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர்கள் சங்க மாநிலத் துணைத் தலைவர் பேராசிரியர் தி.அறிவுடைநம்பி தலைமையில் மாபெரும் உண்ணாவிரதம் நடைபெற்றது.

உண்ணாவிரதத்தை வாழ்த்தி அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் மகேஸ்தமன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ஏ.பாரதி, மாணவர் பெருமன்ற தேசியக்குழு உறுப்பினர் பா.பாக்கியராஜ், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மா.பிரபானந்த், பேராசிரியர்.முக்கம்மதுமைதீன், முனைவர் செந்தில்குமார், பேராசிரியர் வி.பாரி, எ ம் . ர வி ச் ச ந் தி ர ன், ரெ.கோவிந்தராஜ், கரமேஷ் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டம் முழுவதிலிருந்தும் நூற்றுக்கணக்கான கல்லூரி ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

கங்கை நதியைத் தூய்மைப்படுத்த

உலக வங்கி 1000 கோடி ரூபாய் திட்டம்

லக்னோ: கங்கை நதியை மாசு எதுவுமின்றி தூய்மைப்படுத்த உலக வங்கி ஆயிரம் கோடி ரூபாய் அளவிலான ஒரு திட்டத்தை உ.பி. மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது.

இது பற்றி உலக வங்கி அதிகாரிகள் மாநில தலைமைச் செயலாளர் அதுல் குமாரிடம் விவாதித்து கங்கையினுள் பல்வேறு பகுதிகளில் நுழையும் கழிவு நீரை சுத்திகரிப்பது உள்ளிட்ட திட்டங்கள் 1112 கோடி ரூபாய் அளவில் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டங்கள் வாரணாசி, கான்பூர் மற்றும் அலஹாபாத் ஆகிய மிகப் பெருமளவில் கழிவு நீர் மற்றும் தொழில் கழிவுகளை செலுத்தும் நதரங்களை இலக்காகக் கொண்டுள்ளன.

உலக வங்கி அதிகாரிகளுடனான பேச்சு வார்த்தை பயனளிப்பதாக இருந்தது என்று சுற்றுச் சூழல் செயலாளர் அலோக் ரஞ்சன் தெரிவித்தார்.

இம் மூன்று நதரங்களின் கழிவுநீர் இணைப்பு பற்றி விரிவான விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் அதனை ஏற்றுக் கொண்ட உலக வங்கி அதிகாரிகள் உதவியளிக்க உறுதி கூறியதாகவும் அவர் கூறினார்.

வேலைவாய்ப்பற்ற உடல் ஊனமுற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை

மாவட்ட ஆட்சியர் தகவல்

விருதுநகர்: வேலைவாய்ப்பற்ற உடல் ஊனமுற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் அனைத்துவகை ஊன முற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்க அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. உடல் உறுப்பு நலம் குன்றியவராகவோ அல்லது செவிப்புலன் இழந்தவராகவோ அல்லது மனநலம் குன்றிய வராகவோ இருந்து தமது கல்வித் தகுதியை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, ஓராண்டிற்கு மேல் காத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதைக் கடக்காதவராகவும் மற்றவர்கள் 40 வயதைக் கடக்காதவர்களாகவும் இருக்க வேண்டும். குடும்ப வருமானம் ரூ50 மிகாமல் இருக்க வேண்டும். பள்ளி அல்லது கல்லூரியில் பயிலக் கூடாது. எதிலும் பணிபுரிபவராக இருக்கக் கூடாது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் உடல் ஊனமுற்ற பதிவு தாரர்கள், தாம் பதிவு செய்துள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் அனைத்து சான்றிதழ் களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் சிஜிதாமஸ் வைத்யன் தெரிவித்துள்ளார்.

மாயாவதிக்கு ஐந்து கோடி ரூபாய் நோட்டு மாலை

நாடாளுமன்றத்தில் அமளி, அவை ஒத்திவைப்பு

புதுடில்லி: பகுஜன் சமாஜ் கட்சியின் வெள்ளிவிழா கன்சிராமின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற மகாபேரணியில் முதலமைச்சர் மாயாவதிக்கு அணிவிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் நோட்டுகளால் தயாரிக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய் மாலை குறித்து நாடாளுமன்றத்தில் பிரச்சனை எழுப்பப் பட்டது.

இதனால் ஏற்பட்ட அமளியில் சபை இருமுறை ஒத்திவைக்கப் பட்டது.

கேள்வி நேரம் முடிந்தும் பா.ஜ.க. உறுப்பினர் பிஷ்ணு படாரே இந்த பிரச்சனையை கிளப்பினார். சமாஜ்வாதி மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களும் இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தனர்.

இவ்வளவு பெரிய தொகை அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது என்பதை தெரிந்து கொள்ள விரும்புவதாக உறுப்பினர்கள் கோரினர்.

சபையில் கூச்சலும் குழப்பமாக இருந்தது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தி, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் புன்னகையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

சபையை மதியம் ஒரு மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் மீரா குமார் அறிவித்தார்.

சபை மீண்டும் ஒரு மணிக்குக் கூடியபோது எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் பேசுகையில், காபினட் அமைச்சர் ஒருவர் கொடுத்த வாக்குறுதியின்படி ஒவ்வொரு உறுப்பினரையும் குறைந்த பட்சம் இரண்டு நிமிடங்களாவது பேச அனுமதிக்க வேண்டும் என்றார்.

நாடாளுமன்ற துணை சபாநாயகர் கரிய முண்டா பேசுகையில், இந்த பிரச்சனை குறித்து பேசுவதற்கு யாரும் நோட்டீஸ் கொடுக்கவில்லை.

அதனால் யாரையும் பேச அனுமதிக்க முடியாது என்று உறுதியாக கூறி விட்டார்.

மத்திய நிலக்கரி, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் பேசுகையில் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் என்ற முறையில் முலாயம் சிங்கை பேச அனுமதிக்க வேண்டும் என்று கோரினார்.

2ஜக்கிய ஜனதா தலைவர் சரத்யாதவ் இந்த கோரிக்கையை ஆதரித்தார். அந்த மாநிலத்தை சேர்ந்த ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் ஒருவரை பேச அனுமதிக்க வேண்டும் என்று கூறினார். இதற்கு துணை சபாநாயகர் அனுமதி அளித்தார். இதற்கு பகுஜன் சமாஜ் கட்சியை உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மீண்டும் சபையில் கூச்சல் குழப்பமாக இருந்தது. இதனால் இரண்டாவது முறையாக சபை ஒத்திவைக்கப்பட்டது.

இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட 'வாய்ப்புமிகு தமிழ்நாடு' என்ற நூலை துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட, சிங்கப்பூர் துணைத் தூதர் அலித் சிங் பெற்றுக் கொண்டார். உடன் தொழில்துறை முதன்மைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன்

கிரிக்கெட் சூதாட்டத்தில் பாகிஸ்தான் வீரர்கள்

லாகூர்: ஏற்கெனவே பிரச்சனைகளில் சிக்கியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சில முக்கிய வீரர்கள் சூதாட்டத்தில் தொடர்பு கொண்டிருப்பதாக விளையாட்டுத்துறை நிலைக்குழு தெரிவித்துள்ளது. கபார் குரேஷி, தாஹிர் மஷாதி மற்றும் ஹரூன் அக்தார் ஆகிய மூவர் கொண்ட துணைக்குழு பாக். வீரர்கள் தங்களது டவுன் அண்டர் போட்டிகளின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தது.

எனினும் அதில் ஈடுபட்ட வீரர்களின் பெயர்களை தெரிவிக்க வில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆஸ்திரேலியா போட்டிகளில் அணி கலந்து கொண்ட போது அதன் செயல்பாடுகள் பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தப் பயணத்தின் பொழுது சில வீரர்கள் நடந்து கொண்ட முறை பற்றி ஒலி, ஒளி மற்றும் உறுதியான சான்றுகள் உள்ளதாக செய்தியாளர்களிடம் ஹரூன் அக்தார் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இந்த விசாரணையை மிகச் சிறப்பாக செய்திருப்பதாக குழு உறுப்பினர் மஷாதி கூறினார்.

மேலும் சில பிரச்சனைகள் பற்றி விசாரிக்க வேண்டியிருப்பதாலும் இந்தச் சூதாட்டத்தில் கிரிக்கெட் சாராத சிலர் தொடர்பு கொண்டிருப்பதாலும் முழு விசாரணை முடியும் வரை வீரர்கள் பெயரை தெரிவிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

ஒரு வீரர் 50 ரன்கள் எடுக்க முடியும் என்ற நிலையில் 10 ரன்கள் எடுப்பதும் மிக எளிதான பந்துகளைக் கூட பிடிக்காமல் தவற விடுவதும் நடைபெற்றுள்ளதாக மஷாதி கூறினார்.

நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையிலான ஐவர் குழு டில்லியில் கூடுகிறது

புதுடில்லி: தனி தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து ஆராய மத்திய அரசு நியமித்துள்ள நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையிலான ஐவர் குழு நாளை டில்லியில் கூடி ஆலோசனை நடத்துகிறது.

ஐவர் குழு மூன்றாவது முறையாக நாளை டில்லியில் கூடுகிறது என்று கமிட்டியின் செயலாளர் வினோத் கே.டுக்கல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தனி தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து மத்திய அரசு கடந்த மாதம் நீதிபதி கிருஷ்ணா தலைமையில் ஐவர் குழு அமைத்தது. இந்தக் கமிட்டி தனி தெலுங்கானா மாநிலம் குறித்து பல்வேறு தனி நபர்களையும், பல்வேறு அமைப்புகளையும் சந்தித்து கருத்துக்களை கேட்டறிந்துள்ளனர்.

ஏப்ரல் முதல் வாரத்தில் ஐதராபாத்துக்கும், பல பகுதிகளுக்கும் சென்று அரசியல் கட்சிகளையும், பல பொது அமைப்புகளையும் சந்தித்து கருத்து கேட்கப் போவதாக வினோத் தெரிவித்தார்.

புனே வெடிவிபத்தில் உளவுத்துறை தோல்வி இல்லை

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்

புதுடில்லி: புனே வெடிவிபத்தில் உளவுத்துறை தோல்வி எதுவும் இல்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து இப்படிப்பட்ட நிகழ்வுகள் பற்றி குறிப்பிட்டு எச்சரிக்கை அளித்துள்ளதாக மக்களை அவையில் கேள்வி நேரத்தின் போது உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவித்தார்.

மேலும் ஜெர்மன் பேக்கரிக்கும் எச்சரிக்கை சரியான நேரத்தில் வழங்கப் பட்டதாகவும் அந்த எச்சரிக்கை மராத்தியில் எழுதப்பட்டு பேக்கரி மேலாளரால் பெறப்பட்டும் அதுபற்றி அவர்கள் அக்கறை எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்புப் படை நான்கு பெரு நகரங்களில் அமைக்கப் பட்டு பெங்களூருவில் உள்ள துணை ராணுவம் உயர்த்தப்பட்டதாகவும் சிதம்பரம் குறிப்பிட்டார். தீவிரவாதிகளை எதிர் கொள்ள மாநில காவல் துறை நவீனப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு அதன்படி ஆறு மாநிலங்களில் அரசுகள் பணியைத் துவக்கி விட்டதாகவும் சிதம்பரம் தெரிவித்தார்.

குண்டு துளைக்காத அங்கிகள் பற்றி புதிய உத்தரவு அளிக்கப் பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் அவை விரைவில் பெறப்படும் என்று கூறிய அவர், காலதாமதத்தைத் தவிர்க்க மாநில அரசுகள் மத்திய அரசிடம் தங்கள் தேவைகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

சென்னையில், வைரமுத்து தலைமையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் வெளிநாட்டுப் பேராளர் தொடர்புக் குழுவின் மூன்றாம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கனிமொழி எம்.பி., குழுவின் துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மே மாதம் கோவா விமான நிலைய மேம்பாட்டுப் பணி துவக்கம்

புதுடில்லி: கோவாவில் உள்ள டபோலிம் விமான நிலைய விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் வரும் மே மாதம் துவங்கும் என்று மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிரபுல் படேல் தெரிவித்தார். மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் ஒருங்கிணைந்த முனையக் கட்டிடத்திற்காகவும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாகக் கூறினார். விரிவாக்கத்திற்கு இந்திய விமான நிலையங்கள் ஆணையம் 7.5 ஏக்கர் நிலம் இந்திய கப்பற்படையிடம் கேட்டுள்ளதாகவும் படேல் கூறினார்.

இதுபோன்று விமான நிலையங்கள் விரிவாக்கத்திற்கு நிலம் பெறுவதற்காக ஆணையம் இந்தியக் கப்பல் படை மற்றும் இந்திய விமானப்படைகள் ஆகியவைகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், நிலம் பெறும் பொழுது குறிப்பிடப்பட்ட பகுதிகளின் படங்களுடன் கூடிய ஆவணங்களில் இந்தியக் கப்பற்படையும் விமான நிலையங்களில் ஆணையும் கையெழுத்திடுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

விண்வெளி ஆய்வுமையத் தாக்குதலில் தீவிரவாதிகளுக்கு தொடர்பில்லை: காவல்துறை

பெங்களூரு: இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் பாதுகாவலர்களான மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தீவிரவாதிகளுக்குத் தொடர்பில்லை என்று கர்நாடக மாநில காவல் துறை கூடுதல் தலைவர் ஏ.ஆர்.இன்பாண்டு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அப்பகுதியில் முழுவதும் சோதனை நடத்தியதில், எட்டு சுற்று துப்பாக்கி குண்டில் ஆறு காலி குண்டுகள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் கூறினார். மத்திய தொழில் பாதுகாப்புப் படைக்காவலர் ஜாதங் தெரிவித்தபடி, செவ்வாய் காலை 3.20 மணியளவில் காக்கி உடை அணிந்த இருவர் நுழைவாயிலின் அருகில் சந்தேகத்துக்குரிய முறையில் நின்று கொண்டிருந்தாகவும் அவர்களை விசாரித்த பொழுது ஒருவர் தன்னை நேராகி கட்டதால் தானும் திருப்பி ஏட்டு முறை கட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் இருவரும் தப்பி ஓடிவிட்டனர். பாதுகாப்புப் படையினர் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

தாமரை படியுங்கள்